“அமைதி - வளம் - வளர்ச்சி”

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண்.26**

# கொள்கை விளக்கக் குறிப்பு 2016 - 2017

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| | முன்னுரை | 1–10 |
| 1. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | 11–22 |
| 2. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 23–55 |
| 3. | கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் | 56–62 |
| 4. | அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் | 63–64 |
| 5. | இடவசதிக் கட்டுப்பாடு | 65–68 |
| 6. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | 69–76 |
| 7. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 77–94 |

## மானியக் கோரிக்கை எண்.26

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

### முன்னுரை

இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் தமிழ்நாடு பெரிய மாநிலங்களில் முதலிடத்திலும், ஒட்டுமொத்தமாக மூன்றாவது இடத்திலும் உள்ளது. நாட்டின் சராசரியான 31 விழுக்காட்டிற்கு எதிராக தமிழ்நாட்டில் 48.45 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கிறார்கள். தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை அடர்த்தியானது ஒரு சதுர கிலோமீட்டருக்கு 3,521 நபர்கள் என்ற அளவில் உள்ளது. இச்சூழ்நிலையானது சவால்களுடன் வாய்ப்புகளையும் முன்னிறுத்துகிறது. 2001–2011 இடைப்பட்ட காலகட்டத்தில் தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை 27 விழுக்காடு அதிகரித்திருக்கும் வேளையில் குடிசைப்பகுதி மக்கள் தொகை 28.38 இலட்சத்திலிருந்து தோராயமாக 59.00 இலட்சமாக, அதாவது 105 விழுக்காடு அதிகரித்துள்ளது. எனவே, தமிழ்நாடு கண்டுவரும் இவ்விரைவான நகரமயமாக்கலானது, மாநிலம் அடைந்த பொருளாதார

வளர்ச்சியினை பிரதிபலிக்கிறது. அதேவேளையில் இது நிலையான நகர்ப்புற உள்கட்டமைப்பை உருவாக்குவதிலும், வளர்ந்து வரும் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றுவதில் உள்ள சவால்களையும் பிரதிபலிக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, நகர்ப்புறங்களையும் சேர்த்து மாநிலம் முழுவதற்கும் உயர்தர உள்கட்டமைப்பை வழங்குதல் மற்றும் போதுமான வீட்டுவசதி திட்டங்களை நிறைவேற்றி அனைவருக்கும் வீட்டுவசதியினை வழங்குவதன் மூலம் தமிழ்நாட்டை 2023–க்குள் குடிசைப்பகுதிகளற்ற மாநிலமாக உருவாக்குதலையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மேற்காணும் இலக்கினைத் தொடரவும் மேலும், நீடித்த நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்க்கை முறையினை நகர்ப்புறங்களில் உறுதிசெய்யவும், அனைவருக்கும் போதுமான வீட்டுவசதியினை அளிப்பதற்கும், நிலையான நகரமயமாக்குதலை ஊக்குவிக்கவும் அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்திற்குமான ஒரு கொள்கையினை வகுப்பது அவசியமாகிறது. சமூகத்தின் பங்கெடுப்பு மற்றும் பங்களிப்பு வளர்ச்சித் திட்டங்களில் முக்கிய மந்திரமாக

மாற்றப்பட வேண்டும். ஒட்டுமொத்த சமூகத்தின் நன்மைக்காக நகர்ப்புற சமூகத்தின் பங்களிப்புடன் மற்றும் பொது – தனியார் கூட்டு மூலம் ஒரு செயல்முறையினை உருவாக்கும் பணி நகர்ப்புற திட்டமிடல் வல்லுநர்களுக்கு உள்ளது. மேலும் இது, பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டுவசதியினைக் கிடைக்கச் செய்யும் வழிவகைகளையும் கொண்டிருக்கவேண்டும்.

நகர்ப்புற மக்களின் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலை மற்றும் நகர்ப்புறங்களில் வளர்ந்து வரும் குடியிருப்பு மற்றும் அது தொடர்பான கட்டமைப்பு வசதிகளை மனதில் கொண்டு வீட்டுவசதி மற்றும் நிலையான நகர்மயமாக்கலுக்கான கொள்கைகளை வகுப்பது மற்றும் அதனைச் செயல்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசின் உச்ச அதிகாரம் பெற்ற அமைப்பு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கூட்டுறவுச் சங்கங்களின்

பதிவாளர் (வீட்டுவசதி), நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறைகள் இயங்கி வருகின்றன.

அனைவருக்கும் வீட்டுவசதி என்பதை மனதிற்கொண்டு வாங்கத்தக்க விலையில் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினருக்குமான வீடுகளை வழங்கும் பணியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

திட்டமிடல் தொடர்பான பணிகளான நகர்ப்புற உள்கட்டமைப்புகள் மற்றும் போக்குவரத்துத் தேவைக்கேற்ப முழுமைத் திட்டங்கள் உருவாக்குதல், வளர்ச்சி விதிகளை உருவாக்குதல் ஆகியவற்றை செயல்படுத்துவது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பணிகளாகும்.

**கடந்த ஐந்தாண்டுகளில் (2011–2012 முதல் 2015–2016 வரையிலான) இத்துறையின் சாதனைகள்**

- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ரூ.4,971.46 கோடி செலவில் பல்வேறு திட்டங்களின்கீழ் 38,142 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வீட்டுவசதித் திட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒதுக்கீடு 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

- 48,564 ஒதுக்கீடுதாரர்களுக்கு வீட்டு விற்பனைப் பத்திரம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசால் அறிவிக்கப்பட்ட வட்டித் தள்ளுபடித் திட்டத்தின் மூலம் 14,992 ஒதுக்கீடுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

- சென்னை மற்றும் இதர நகரங்களில், பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.3,702.26 கோடி செலவில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 62,609 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

- 2015–2016 ஆம் நிதியாண்டில் “அனைவருக்கும் வீட்டுவசதித்” திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக ரூ.1,616.94 கோடி செலவில் 38,534 குடியிருப்புகள் கட்டும் பணியினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. மேலும், பேரூராட்சிகளில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு 20,000 பசுமை வீடுகளை ரூ.420.00 கோடி செலவில் கட்டும் பணியினையும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இதில் அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின்கீழான 10,000 வீடுகளும் அடங்கும்.

- சென்னை மற்றும் இதர நகரங்களில், ரூ.360.77 கோடி செலவில் 4,524 பழுதடைந்த குடியிருப்புகளின் மறு கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது.

- மதுரை மாநகரை குடிசைப்பகுதிகளற்ற மாநகராக மாற்றுவதற்கு தோப்பூர் உச்சப்பட்டி துணைக்கோள் நகரத்தில் 4,500 குடிசை வாசிகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மறு குடியமர்த்த திட்டமிட்டுள்ளது.

- நகர் ஊரமைப்பு இயக்ககம், பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.1,600 கோடிக்கு மேல் பல்வேறு துறைகளுக்கு வழங்கியுள்ளது.

- புராதன நகரங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, மானியமாக வழங்கப்படும் தொகையை ரூ.50.00 இலட்சத்திலிருந்து ரூ.1.00 கோடியாக நகர் ஊரமைப்பு இயக்ககம் உயர்த்தியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் 26 புராதன நகரங்களுக்கு ரூ.22.23 கோடி தொகையினை மானியமாக வழங்கியுள்ளது.

- போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2011 முதல் 2015 வரை, 3 மாநகராட்சிகள் மற்றும் 32 நகராட்சிகளுக்கு ரூ.14.51 கோடி தொகையினை நகர் ஊரமைப்பு இயக்ககம் வழங்கியுள்ளது.

- சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை மாநகரின் ஓர் அடையாளச் சின்னமாகவும் மற்றும் பல்வழி போக்குவரத்து ஒருங்கிணைப்பு மையமாகவும் உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு ரூ.389.42 கோடி நிதியுதவியினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

- சித்தமனூர், மறைமலைநகர் பகுதியில் சுமார் 32.26 ஏக்கர் பரப்பளவில் ரூ.14.00 கோடி செலவில் 30 தொழிற்கூடங்களுக்கான மனைப்பிரிவினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கியுள்ளது.

- கோயம்பேடு, சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில், 3,655 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ.20.00 கோடி செலவில் 2,500 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 50 சீருந்துகள் நிறுத்துமிடம் உள்ளிட்ட கூடுதல் இரண்டு அடுக்கு தரைத்தள வாகன நிறுத்தத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கியுள்ளது.

- கோயம்பேட்டில் ரூ.128.41 கோடி திட்ட மதிப்பீட்டில், 14.41 ஏக்கர் பரப்பளவில் 492 கடைகள் கொண்ட மொத்த உணவு தானிய அங்காடி வளாகம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டப்பட்டுள்ளது.

- மாற்றத்தக்க வளர்ச்சி உரிமம் கொடுக்கப்பட்டதின்– பேரில் 320 தெருக்களை சீர்படுத்துவதற்கும், இணைப்புச் சாலைகள் மற்றும் சாலைகளை அகலப்படுத்தவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்

குழுமத்தால் கட்டுமானதாரர்களிடமிருந்து நிலங்கள் பெறப்பட்டன. இதில் 256 தெருக்களுக்கான நிலங்கள் தொடர்புடைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- உள்ளாட்சி நிதியுதவித் திட்டத்தின் மூலம் 98 உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.1,577.08 இலட்சம் நிதியுதவியினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

- 24 சமூகம் சார்ந்த சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ரூ.387.19 இலட்சம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# 2016–2017 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

## சுருக்கம்

| வ. எண் | துறை / முகவாண்மை | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் ஆயிரத்தில் (*தொகு மொத்தம்*) | | | |
| 1. | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 7,74,67 | –– | 136,00,01 | 143,74,68 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | சாட்டியது | 1 | – | –– | 1 |
| | | அனுமதித்தது | 399,29,89 | | | 399,29,89 |
| 3. | கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் | சாட்டியது | 1 | –– | –– | 1 |
| | | அனுமதித்தது | 20,93,82 | | | 20,93,82 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | அனுமதித்தது | 57,64,00 | 511,96,88 | 500,00,00 | 1,069,60,88 |
| 5. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | அனுமதித்தது | 23,01,84 | 25,40,00 | –– | 48,41,84 |
| 6. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | அனுமதித்தது | 695,46,14 | 80,00,01 | –– | 775,46,15 |
| | | சாட்டியது | 2 | | | 2 |
| | மொத்தம் | அனுமதித்தது | 1,204,10,36 | 617,36,89 | 636,00,01 | 2,457,47,26 |

## 1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

மாநிலத்தில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களின் வீட்டுவசதித் தேவையை நிறைவேற்றும்பொருட்டு, அனைவருக்கும் வீட்டுவசதி என்ற குறிக்கோளின் அடிப்படையில் 1961–ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பல புறநகர் திட்டங்கள் மற்றும் மாபெரும் நகரியங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 4,12,727 அலகுகள் வாரியத்தால் கட்டப்பட்டு / மேம்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில், 2,23,294 அலகுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்காகவும், குறைந்த வருவாய்ப் பிரிவு மக்களுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் ஏழை மக்கள் வாங்கத்தக்க விலையில் அவர்களின் வீட்டுவசதித் தேவையை நிறைவேற்றுவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு சென்னை, மாவட்ட தலைநகரங்கள் மற்றும் இதர நகரங்களில் பல வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு வீட்டுவசதி

வாரியம் முக்கியக் காரணியாக விளங்குகிறது. உலக வங்கி உதவியுடன் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பல திட்டங்களை வாரியம் செயல்படுத்தியுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவு மக்களின் வீட்டுவசதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அவர்கள் வாங்கத்தக்க விலையில் திட்டங்களைச் செயல்படுத்துவது தற்பொழுது வாரியத்தின் முக்கியக் குறிக்கோளாக உள்ளது.

வீடுகள் மற்றும் குடியிருப்புகளின் பரப்பளவினை குடியிருக்கும் நபர்களுக்கு ஏற்ற வகையில் அதிகரித்து மேன்மையான வீட்டுவசதி திட்டத்தினை செயல்படுத்துவதும் வாரியத்தின் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, தற்போது குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு இரண்டு படுக்கை அறை, கூடம் மற்றும் சமையல் அறை கொண்ட குடியிருப்புகளை வழங்க உரிய கட்டட வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வாரியத்தால் மாநிலம் முழுவதும் பல்வேறு பிரிவினருக்காக செயல்படுத்திய திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:**




## 1.1 2011–2012 முதல் 2015–2016 வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சாதனைகள்:

- ரூ.1,162.68 கோடி மதிப்பீட்டில் 14,063 புதிய குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு / மேம்படுத்தப்பட்டு உள்ளது.

- தற்போது ரூ.3,808.78 கோடி மதிப்பீட்டில் 24,079 புதிய குடியிருப்புகள் கட்டும் / மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் பயன்பெற்ற 14,992 பயனாளிகளுடன் சேர்த்து 48,564 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும் வீடுகள் / குடியிருப்புகள் / மனைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- கடந்த 2014 ஆம் ஆண்டில் 108 உதவிப் பொறியாளர்கள் புதிதாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.




## 1.2 நடைபெற்று வரும் திட்டங்கள்

அ) தற்போது மாநிலம் முழுவதும் பின்வரும் முக்கிய திட்டங்கள் உட்பட **24,079** அலகுகளுக்கான பணிகள் ரூ.3,808.78 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

1. சென்னை நெற்குன்றத்தில் அகில இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், மாநில அரசின் முதனிலை அதிகாரிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள்

ஆகியோர்களுக்கான சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,016 பன்னடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்.

2. சென்னை சோழிங்கநல்லூரில் முன்கட்டுமான தொழில் நுட்பத்தைப் (pre-fab technology) பயன்படுத்தி 1,500 பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டுதல்.

3. சென்னை அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்காக 60 குடியிருப்புகள் கட்டுதல்.

4. சென்னை, அசோக்பில்லர் அருகே உள்ள மரவேலைப் பிரிவில் (Wood Working Unit) சுயநிதித் திட்டத்தின் கீழ் 407 பன்னடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 154 இடமாற்றக் குடியிருப்புகள் கட்டுதல்.

5. சென்னை கோயம்பேடு தெற்காசிய விளையாட்டு கூட்டமைப்பு கிராமத்தில் சுயநிதித் திட்டத்தின்கீழ் 136 பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்.

6. வாங்கத்தக்க விலையிலான வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சென்னை அம்பத்தூரில் இரண்டு படுக்கை அறை கொண்ட குடியிருப்பு ஒன்றின் விற்பனை விலை ரூ.20.00 இலட்சத்திற்கு மிகாமல்

நிர்ணயக்கப்பட்டு, **2,394** பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்.

7. “சி” மற்றும் “டி” பிரிவு அரசு ஊழியர்களுக்கென சென்னை பாடிகுப்பத்தில் **236** அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வில்லிவாக்கத்தில் **324** பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்.

8. பழுதடைந்த அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய இருப்பதால் அக்குடியிருப்புகளில் உள்ள அரசு ஊழியர்களுக்கு மாற்று குடியிருப்பு செய்து தர சென்னை, புரசைவாக்கம் பராக்கா சாலை அருகில் **160** இடமாறுதல் குடியிருப்புகள் கட்டுதல்.

9. திருச்சிராப்பள்ளி நாவல்பட்டில் மனைமேம்பாட்டு திட்டத்தின்கீழ் **1,459** பல்வகை மனைகள் அமைத்தல்.

10. சென்னை அண்ணா நகரில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திற்காக (ONGC) பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் அலுவலக வளாகம் கட்டுதல்.

11. சென்னை மாதவரம் ஜம்புலி காலனியில், சென்னைப் பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்காக சமுதாய நலக்கூடம் வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் கட்டுதல்.

## ஆ) துணைக்கோள் நகரத் திட்டங்கள்

### 1. திருமழிசை

சென்னை, திருமழிசையில் **311.05** ஏக்கர் பரப்பளவில் துணைக்கோள் நகரம் அமைக்க உரிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் பகுதிவாரியாக செயல்படுத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக **130** ஏக்கர் பரப்பளவில், மேம்பாட்டு பணிகளான, திட்டத்திற்கான அணுகு சாலை அமைத்தல், திட்ட உட்புற சாலைகள் அமைத்தல், கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல், சிறு பாலங்கள்அமைத்தல், குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் வழங்குதல் போன்ற பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### 2. தோப்பூர் – உச்சப்பட்டி

மதுரை நகரின் விரிவாக்கப்பகுதியில் அமைந்துள்ள தோப்பூர் – உச்சப்பட்டியில் **573.83** ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய

ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரத்தினை அமைக்க, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நகரத்திற்கான கருத்தினை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மனை வரைபடத்தின் அடிப்படையில் **9,557** மனைகளுக்கான மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளின் மறு கட்டுமான பணி

அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளின் வசதிகள் மற்றும் தரத்தினை மேம்படுத்தும் நோக்கிலும் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் சிதிலமடைந்த அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுமேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசுடன் இணைந்து புரிந்துணர்வு முறையில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளின் மறுகட்டுமான திட்டத்திற்கு தேவைப்படும் நிதியினை அதிக தளப்பரப்பு குறியீடு உள்ள இடங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சுயநிதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தின் மூலம் கிடைக்க பெறும்

வருவாயில் ஈடுகட்ட உத்தேசித்துள்ளது. அதன் அடிப்படையில் பின்வரும் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. சென்னை அண்ணாநகர் மேற்கு விரிவாக்கத்தில் 606 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடிவுற்று மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. பொள்ளாச்சியில் 108 புதிய அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. கோயம்புத்தூர் கவுண்டம்பாளையத்தில் 1,848 புதிய அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 1.3 2016–2017–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

### அ. சென்னை பட்டினப்பாக்கம் மறு மேம்பாட்டுத் திட்டம்

சென்னை பட்டினப்பாக்கம் மறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் மற்றும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும்

நோக்கில் குடியிருப்புகள் / வணிக வளாகங்கள் ஆகியவற்றினை கூட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஆ. குடிசைப்பகுதி குடியிருப்புகளின் மறுகட்டுமானம்**

ஈரோட்டில் **3** இடங்களில் உள்ள பழுதடைந்த **1,072** குடிசைப்பகுதி குடியிருப்புகள் முழுவதுமாக இடிக்கப்பட்டுவிட்டன. அதே இடங்களில் ரூ.**111.25** கோடி மதிப்பீட்டில், **1,072** புதிய குடிசைப்பகுதி குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணி இந்நிதியாண்டில் துவங்கப்படவுள்ளது.

**இ. வாரிய வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டம்**

சென்னை திருவான்மியூரில் **160** வாரிய வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் இந்நிதியாண்டில் துவங்கப்படும்.

**ஈ. வாரிய கட்டடங்களின் மறு கட்டுமானம்**

சென்னை மந்தவெளிப்பாக்கம் மற்றும் நந்தனம் சி.ஐ.டி. நகரில் நீதிமன்ற வழக்குகள் முடிவுற்றபின் வாரிய வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

## 1.4 பகுதி 1 திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள், சட்டமன்ற உறுப்பினர் விடுதி, தொழிலாளர் மானிய வீட்டுவசதி குடியிருப்புகள் ஆகியவற்றின் வருடாந்திரப் பராமரிப்புப் பணிகள் / சிறப்பு பராமரிப்புப் பணிகளுக்காகவும் மற்றும் இதர செலவினங்களுக்காகவும் பகுதி 1 திட்டத்தின்கீழ் **2016–2017**–ஆம் நிதியாண்டில் ரூ.**23.02** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 1.5 வருவாய் வசூல்

**2015–2016** ஆம் நிதியாண்டில் குடியிருப்பு / வணிக அலகுகள் ஆகியவற்றின் விற்பனை மற்றும் வசூல் ஆகியவற்றின் மூலம் ரூ.**682.91** கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.45 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்வதால், நாட்டின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். பொருளாதார வளர்ச்சி காரணமாக நகரமயமாக்கல் பெருகி வருவதால், குடிசைப்பகுதிகள் அதிகமாக உருவாகி வருகின்றன. ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான பாதுகாப்பான சாலைகள், குடிநீர், மின்சாரம், திடக்கழிவு அகற்றல் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாததன் காரணமாக, பாதுகாப்பற்ற வீட்டு வசதி மற்றும் ஆரோக்கியமற்ற சுற்றுப்புறங்களின் மாதிரி மையங்களாக நகர குடிசைப்பகுதிகள் உள்ளன. தமிழகத்தின் நகர குடிசைப்பகுதிகளில் 14.63 இலட்சம் குடும்பங்கள் வாழ்வதாக, 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்புத் துறை அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற நோக்கத்துடன் குடிசைப்பகுதிவாழ் மக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த அடிப்படை வசதிகளுடன் கூடிய வாழ்வதற்கேற்ற குடியிருப்புகளையும் வாழ்வாதார

திட்டங்களையும் வழங்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் செப்டம்பர், 1970–இல் துவங்கப்பட்டது. இவ்வாரியத்தின் பணிகள் முதலில் சென்னை நகரில் செயல்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக 1984–ஆம் ஆண்டு முதல், தமிழகத்தின் இதர நகர்ப்பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது.

## 2.1 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வாரியத் தலைவரின்கீழ் இயங்குகிறது. வாரியத் தலைவருக்கு மேலாண்மை இயக்குநர் உதவியாக உள்ளார். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பல்வேறு பணிகள் சென்னையில் 3 சரகங்கள், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு சரகம் மற்றும் சென்னையில் 15 கோட்டங்கள், கோயம்புத்தூரில் 2 கோட்டங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி நகரங்களில் முறையே தலா ஒரு கோட்டம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கட்டமைப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவு வாரியத்தின் அனைத்துத் திட்டங்களுக்கான கட்டமைப்பு வடிவங்களுக்கான பணிகள் மற்றும் திட்டப் புலங்களில் தரப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 2.2 குடிசைப்பகுதிகளுக்கான கொள்கை

நகர குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புறம் மற்றும் நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தவும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் களப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், களப்பகுதிகளில் மனைகள் மேம்பாட்டுப்பணிகள், மறுகுடியமர்வு, சமுதாய நலப்பணிகள் போன்ற பல்வேறு பணிகளை செயல்படுத்தி வருகின்றது. 'தொலைநோக்குத் திட்டம், 2023' ஆவணத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு 2023 ஆம் ஆண்டிற்குள் குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை உருவாக்கும் குறிக்கோளை நிறைவேற்றிட அந்தந்த குடிசைப்பகுதியின் நிலைக்கேற்ப கீழே குறிப்பிட்டுள்ள யுக்திகள் பின்பற்றப்படுகின்றன:-

### i) களப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டங்கள்

நகரத்தின் மையப் பகுதிகளில் ஆட்சேபகரமற்ற இடங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் நிலத்தினை அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் உள்ள பகுதிகளில், குடிசைகளை அகற்றி அப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு

இக்குடியிருப்புகள், முன்னர் அப்பகுதியில் வாழ்ந்து வந்த அதே குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பின்னர் இக்குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் கூடுதலாக மக்களை குடியமர்த்துவதற்கு ஏதுவாக அதிக வீடுகளை உருவாக்குவதற்கு கிடைக்கப் பெறும் அதிக தரைப் பரப்பளவு குறியீட்டினை உபயோகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ii) களப் பகுதிகளில் மனை மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு – சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

கள மேம்பாட்டுப் பணிகளை உள்ளது உள்ளபடி நிலையில் மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப்பகுதிகளில் அப்பகுதி மக்கள் வாழ்வதற்கேற்ப சாலைகள், தெரு மின்விளக்குகள், நடைபாதை போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. பின்னர், இத்திட்டப்பகுதிகளின் நிலம் வருவாய்த் துறையிடமிருந்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் அங்கு வாழ்ந்த குடும்பங்களுக்கு அவர்கள் வசித்த மனைப் பரப்பிற்கான நில உரிமம் வழங்கப்படுகிறது.

### iii) மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டப்பணிகள்

கள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத ஆட்சேபகரமான குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு, அருகாமையில் உள்ள வெற்று நிலங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் போதிய அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. இத்தகைய மறுகுடியமர்வுத் திட்டங்கள் போதிய சமூக மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் 'ஒருங்கிணைந்த நகரங்களாக' உருவாக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் அந்த நிலம் உரிய பயன்பாட்டிற்காக சம்மந்தப்பட்ட துறைக்கு மீண்டும் ஒப்படைக்கப்படுகிறது.

### iv) சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள், பயன்பாடு மற்றும் தேய்மானம், காற்று மண்டலத்தின் விளைவுகள் போன்றவற்றின் காரணமாக சிதலமடைந்து, இக்குடியிருப்புகளில் குடியிருப்போரின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் நிலையில்

உள்ளன. இக்குடியிருப்புகளின் பாதிப்புத்தன்மை குறித்து ஒரு தொழில்நுட்பக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு மறுகட்டுமானம் செய்யப்பட்டு அக்குடியிருப்புகளில் வசித்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## v) இதரப் பணிகள்

ஏழைமக்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருளாதார உயர்வினை உறுதி செய்யும் வகையில் தொழிற்கல்வி பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்த சுவர்களுக்கு வெள்ளையடித்தல் மற்றும் வர்ணம் பூசுதல், கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு வர்ணம் அடித்தல், கட்டடங்களின் நிலைத்தன்மை மற்றும் ஆயுளை அதிகரிக்கவும், வாழும் சூழ்நிலையினை மேம்படுத்தவும் குடியிருப்புகளுக்கு தேவைப்படும் சிறு பழுதுகள் நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.3 1970 முதல் மார்ச், 2016 வரையிலான சாதனைகள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் துவங்கப்பட்டது முதல் 1.69 இலட்சம் வீடுகள் / குடியிருப்புகளை கட்டியுள்ளது. மேலும் 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 504 குடிசைப்பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கியுள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மார்ச், 2016 வரை நகர்ப்புற குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கான வீட்டுவசதி, குடிசைப்பகுதி மேம்பாடு, வாழ்வாதாரப் பணிகள் போன்றவற்றிற்காக இதுவரை ரூ.4,535.37 கோடி செலவிட்டுள்ளது.

## 2.4. காலவரிசைப்படி நிகழ்வுகள்

| | |
|---|---|
| 1970 | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. |
| 1971 | தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் மாற்று) சட்டம் இயற்றப்பட்டது. |
| 1971 | சென்னை நகரில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனை உரிமம் அற்ற குடிசை மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1977 | சென்னையில் மனை உரிமத்துடன் கூடிய குடிசைப்பகுதி மேம்பாடு |
| 1984 | அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனை உரிமம் அற்ற குடிசை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் இதர மாநகராட்சி / நகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. |
| 1985 | பெருமளவிலான ஓட்டு வீடுகள் அமைக்கும் திட்ட செயலாக்கம் |
| 1987 | சென்னை மற்றும் இதர நகரங்களில் மனை உரிமத்துடன் கூடிய குடிசைப்பகுதி மேம்பாடு |
| 1992 | நகர்ப்புற சீரமைப்புத் திட்டத்தின்கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவினர் / மத்தியதர வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகள் கட்டுதல் |
| 1995 | நிதிக்குழு மானியங்கள் மற்றும் இதர நிதி ஆதாரங்களுடன் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டங்கள் |
| 2008 | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பெருமளவிலான மறுகுடியமர்வுத் திட்டங்களின் துவக்கம் |

| | |
|---|---|
| 2012 | தொலைநோக்குத் திட்டம் 2023 – குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் |
| 2015 | குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் இலக்கை அடைய 'அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம்' |

## 2.5. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகளில் சாதனைகள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஆண்டுகளில் கீழே கூறப்பட்டுள்ளவாறு பல்வேறு திட்டங்களின்கீழ் 59,023 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகளைக் கட்டியுள்ளது மற்றும் பல்வேறு திட்டப்பணிகளுக்காக ரூ.2,753.42 கோடி செலவிட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | கட்டப்பட்ட குடியிருப்புகள் / வீடுகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 2011–12 முதல் 2014–2015 வரை | 2015–2016 | |
| 1 | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 33,234 | 6,752 | 39,986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | அவசர சுனாமி மறு குடியமர்வுத் திட்டம் | 6,292 | –– | 6,292 |
| 3 | 13 வது நிதிக்குழு – சிறப்பு மானியம் | 4,227 | –– | 4,227 |
| 4 | சிதலமடைந்த குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல் | 554 | 2,964 | 3,518 |
| 5 | மாநில நிதியுதவியின்கீழ் புதிய குடியிருப்புகள் கட்டுதல் | 508 | 300 | 808 |
| 6 | இராஜீவ் காந்தி மறுகுடியமர்வுத் திட்டம் / சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம் | 500 | 218 | 718 |
| 7 | இராஜீவ் வீட்டு வசதித் திட்டம் | 158 | 3,316 | 3,474 |
| | **மொத்தம்** | **45,473** | **13,550** | **59,023** |

## 2.6. அனைவருக்கும் வீட்டு வசதி / குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை அடைய தற்போது நடைபெறும் பெரும் திட்டங்கள்

### தொலைநோக்குத் திட்டம் 2023 – குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள்

தமிழகத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி விரைவான பொருளாதார வளர்ச்சியினை அடைய நீண்ட

காலத் திட்டமான "தொலைநோக்குத் திட்டம் 2023" மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதரத் திட்டங்களுடன் மாநகரங்கள் / நகரங்களை 2023–க்குள் குடிசைப்பகுதிகளற்றதாக உருவாக்க தமிழகத்தின் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் 2023–க்கு முன்னர் உரிய வசதிகளுடன் வீட்டுவசதி ரூ.65,000/– கோடி செலவில் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசால் பல்வேறு திட்டங்களின்கீழ், குறிப்பாக பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் (PMAY) வழங்கப்பட்ட மானியம் / மாநில அரசின் நிதி ஆதாரம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் பெறப்படும் நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றது.

**(அ) மத்திய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டம்**

**i) பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம்**

மைய அரசு 2015ஆம் ஆண்டு 'அனைவருக்கும் வீட்டுவசதி – 2022' எனும் திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சட்ட ரீதியான நகரங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட பிரதம மந்திரி

வீட்டுவசதித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. நலிவுற்ற பிரிவினருக்கு 30 சதுர மீட்டர்வரை பரப்பளவு கொண்ட அடிப்படை சமூக வசதிகளுடன் கூடிய வீடுகள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 60 சதுர மீட்டர் வரையிலான வீடுகள் கட்ட இத்திட்டம் நிதி ஆதாரத்தினை வழங்கும்.

அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் கூடுதலான i) குடிசைப் பகுதிகளில் கள மறுமேம்பாடு ii) பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் iii) பயனாளிகள் தாங்கள் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ள மானியம் ஆகியவற்றின்கீழ் வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்தும் திட்ட இயக்குநரகமாகவும், மாநில அளவிலான முகமை நிறுவனமாகவும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தினை செயல்படுத்த, மாநில அரசு மற்றும் மைய அரசுகளுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டப் பணிகளை முதற்கட்டமாக தமிழகத்தில் 191 நகரங்களில் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அளவிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க, அரசு தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு இந்த அரசு **2015–2016** ஆம் ஆண்டிற்கு மைய அரசின் மானியமாக ரூ.**510.20** கோடி பெற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## மைய அரசின் ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழு 2015–2016 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ள திட்டங்கள்

(ரூ.கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | குடியிருப் புகள் / வீடுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | மைய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நிறுவன நிதி | பயனாளி களின் பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் – திட்டம் – III | 19 | 10,228 | 812.66 | 153.42 | 357.61 | 185.55 | 116.08 |
| 2 | பயனாளிகள் தலைமை யிலான கட்டுமானம் – திட்டம் – IV | 21 | 13,785 | 345.93 | 206.78 | 82.71 | 0.00 | 56.45 |
| | **மொத்தம்** | **40** | **24,013** | **1,158.59** | **360.20** | **440.32** | **185.55** | **172.52** |
| 3 | பேரூராட்சிக ளில் 10,000 பசுமை வீடுகள் | 157 | 10,000 | 253.00 | 150.00 | 60.00 | 0.00 | 43.00 |
| **மொத்தம்** | | **197** | **34,013** | **1,411.59** | **510.20** | **500.32** | **185.55** | **215.52** |

## மைய அரசின் ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு 2016–2017 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ள திட்டங்கள்

(ரூ.கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | குடியிருப் புகள் / வீடுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | மைய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நிறுவன நிதி | பயனாளி களின் பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் – திட்டம்– III | 2 | 1,328 | 109.56 | 19.92 | 27.39 | 51.29 | 10.95 |
| 2 | பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம் – திட்டம் – IV | 7 | 3,193 | 95.79 | 47.90 | 19.16 | 0.00 | 28.74 |
| | **மொத்தம்** | **9** | **4,521** | **205.35** | **67.82** | **46.55** | **51.29** | **39.69** |

மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மானியம் பெறும் பல்வேறு திட்டங்களைக் கீழே காணலாம்:

### அ) குடிசைப்பகுதிகளில் கள மறுமேம்பாடு

தனியார் பங்களிப்புடன் நிலத்தினை வள ஆதாரமாகக் பயன்படுத்தி வீடுகள் கட்டுதல் குடிசைப்பகுதிகளில் கள மறுமேம்பாட்டுத் திட்டத்தின் குறிக்கோளாகும். குடிசைப்பகுதிகளில் வாழும் அனைத்து தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கும் வீட்டு வசதி வழங்க மைய அரசு நிலம் /

மாநில அரசு நிலம் / நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான நிலங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் கள மறுமேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். குடிசைப்பகுதிகளில் கள மறுமேம்பாட்டு திட்டங்களை நிதி சாத்தியமான திட்டமாக செயல்படுத்த கூடுதல் தரை தள விகிதாசாரம் / தரை தள குறியீடு / மாற்றத்தக்க மேம்பாட்டு உரிமைகள் போன்ற முறைகளில் வழிவகை செய்யப்படும். குடிசைப்பகுதி மறுகுடியமர்வு மானியமாக வீடு ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் மைய அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகை மாநில அரசு மற்றும் பயனாளிகளால் பகிர்ந்து கொள்ளப்படும்.

**ஆ) மானியத்துடன் கூடிய கடன்**

தகுதி வாய்ந்த நகர்ப்புற ஏழைகள் (நலிவடைந்த பிரிவினர் / குறைந்த வருவாய்ப் பிரிவினர்) வீடுகள் கட்ட / வீடுகள் வாங்க பெறும் கடன் தொகைக்கான வட்டிக்கு மானியம் வழங்கப்படும். பயன் பெறும் குடும்பங்கள், ரூ.6.00 இலட்சம் வரையிலான கடன் தொகையினை 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வட்டிக்கான மானியம் 6.5 விழுக்காடு பெற தகுதியுடையவர். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் / குறைந்த வருவாய்ப் பிரிவினர் குடும்பங்கள், அவர்களின் வருமானம் ரூ.6.00 இலட்சத்திற்கும்

மிகாமல் உள்ளது என்பதை நிரூபிக்க சுயசான்றிதழ் சமர்ப்பித்து 15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக் கூடிய மானியத்துடன் கூடிய கடனாக ரூ.6.00 இலட்சம் வரை பெறலாம்.

## இ) பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள்

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கான வீடுகளை அதிகரிக்க மாநில அரசுகள் அதன் நிறுவனங்கள் அல்லது தனியார் பங்களிப்புடன் திறனுக்கேற்ப வீடுகள் கட்ட திட்டமிடலாம். நலிவடைந்த பிரிவினர்களுக்கான வீடுகளுக்கு வீடு ஒன்றிற்கு ரூ.1.50 இலட்சம் மைய அரசின் நிதி இருக்கும். பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் திட்டம் பல்வேறு பிரிவினர்களுக்கான வீட்டு வசதித் திட்டமாக செயல்படுத்தலாம். திட்டம் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 250 வீடுகள் கட்டும் திட்டமாகவும், இவ்வகைத் திட்டங்களில் குறைந்தபட்சம் 35 விழுக்காடு வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக கட்டப்பட்டால் மட்டுமே மைய அரசின் நிதி ஆதாரம் பெற தகுதி உடையதாகும்.

நெருக்கமான குடிசைப்பகுதிகள் மற்றும் ஆட்சேபகரமான இடங்களில் உள்ள நகர குடிசைவாழ்

குடும்பங்களின் வீட்டுவசதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஒவ்வொன்றும் **400** சதுர அடி கட்டடப் பரப்பளவு கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் இவ்வகையின் கீழ் அமைக்கப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கள மேம்பாடு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் சராசரியாக அலகு ஒன்றிற்கு ரூ.**9.00** இலட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படும்.

**ஈ) பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம்**

இத்திட்டத்தின் நான்காவது கூறு, பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரில் தகுதி வாய்ந்த குடும்பங்கள் புதிய குடியிருப்பு அல்லது தற்போது உள்ள குடியிருப்பினை மேம்படுத்த நிதியுதவி வழங்க வகை செய்கிறது. இதுபோன்ற குடும்பங்கள் மைய அரசின் மானியமாக ரூ.**1.50** இலட்சத்தை இத்திட்டத்தின்கீழ் பெறலாம். பின்வரும் நிதிப் பங்கீட்டின்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்:-

| வ. எண். | விவரம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | மைய அரசின் மானியம் | 1,50,000 |
| 2. | மாநில அரசின் மானியம் | 60,000 |

குடிசைப்பகுதிகளின் உள்ளே அல்லது வெளியே குடிசைகளில் வாழும் குடும்பங்கள் தாங்கள் வாழும் இடத்திற்கான உரிய ஆவணம் உடையவர்களாக இருப்பின் மேற்கூறப்பட்ட சலுகைகளைப் பெறலாம்.

இதுவரை இந்த அரசு ரூ.1,616.94 கோடி தொகையை 38,534 வீடுகள் / குடியிருப்புகள் கட்டுவதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றுள்ளது.

### ii) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் 42,318 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.2,393.98 கோடி மதிப்பீட்டில் கட்ட மைய மற்றும் மாநில அரசுகளால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் பங்களிப்புத் திட்டமாக 50:40:10 விகிதாசாரத்தில் மைய அரசு, மாநில அரசு மற்றும் பயனாளிகளின் பங்குடன் செயல்படுத்தப்படுகின்றன. எனினும், பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றம் போன்ற இனங்களால் ஏற்பட்ட கூடுதல் செலவினங்களுக்கான பங்களிப்பினை வழங்காததால், இத்திட்டத்தின் முதல் மதிப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு மட்டுமே வழங்கப்படும் என மைய

அரசு குறிப்பாக தெரிவித்தமையால் முடிவுற்ற வீடுகளின் மொத்த செலவினத்தில் 70 விழுக்காடு தொகையை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இத்திட்டம் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழ்ந்து வரும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய ஒருங்கிணைந்த நகரங்களை அமைக்கும் குறிக்கோளுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், இதுவரை ரூ.2,234.18 கோடி செலவில் 39,986 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. மீதமுள்ள 2,332 குடியிருப்புகள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ரூ.159.80 கோடி மதிப்பீட்டில் 2016–2017ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

### iii) இராஜீவ் வீட்டு வசதித் திட்டம்

இராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் ரூ.318.73 கோடி மதிப்பீட்டில் 4,763 குடியிருப்புகள்/தனி வீடுகள் கட்ட மைய அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன. இதுவரை 3,474 குடியிருப்புகள்/தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,289

குடியிருப்புகள் / தனி வீடுகள் 2016–2017ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

**(ஆ) மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**(i) பேரூராட்சிகளில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு குடும்பங்களுக்கு பசுமை வீடுகள்**

தமிழ்நாட்டில் பேரூராட்சிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு குடும்பங்களுக்கு ரூ.420.00 கோடி செலவில் 20,000 பசுமை வீடுகள் அமைக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பேரூராட்சிகளில் 10,732 வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், 20,000 வீடுகள் அமைக்கும் பணிகள் 2016–2017 ஆம் நிதியாண்டின் இறுதியில் முடிவுறும். இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தில் ஒரு பகுதி மைய அரசின் பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதி ஆதாரம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்திடம் (HUDCO) கடனாக பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டு இதுவரை ரூ.90.00 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

## (ii) சிதலமடைந்த குடியிருப்புகளின் மறுகட்டுமானம்

சென்னை மற்றும் இதர நகரங்களில் முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளின் சில கட்டடங்கள், மாறுபட்ட தட்பவெட்ப நிலைகள், பயன்பாடு மற்றும் தேய்மானம், காற்றுவெளி பாதிப்புகள் மற்றும் குடியிருப்புகளின் அமைப்புகளில் மாற்றங்கள், கட்டட பகுதிகளைச் சுற்றி, ஆக்கிரமிப்புகள் போன்ற பல்வேறு காரணங்களால் வலுவிழந்து, சிதலமடைந்து இக்குடியிருப்புகளில் வாழ்வோரின்/ உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளன.

சென்னை மற்றும் இதர மாவட்டகளில் சிதலமடைந்த நிலையிலுள்ள **3,500** குடியிருப்புகளை இடித்துவிட்டு மாநில அரசின் நிதி ஆதாரம் பெற்று ரூ.**280.00** கோடி செலவில் மறுகட்டுமானம் செய்யும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கிணங்க **2,576** குடியிருப்புகளுக்கான மறு கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் மீதமுள்ள **957** குடியிருப்புகளுக்கான முன்னேற்றத்திலுள்ள பணிகள் **2016–2017**ஆம் ஆண்டில் முடிக்கப்படும். **2016–2017** ஆம் ஆண்டில் இடிக்கப்பட்டு மறுகட்டுமானம்

செய்யப்படவுள்ள திட்டப்பகுதிகளின் விவரங்கள், குடியிருப்புகள் மற்றும் திட்ட செலவின விவரங்கள் பின்வருமாறு:-

**மறுகட்டுமானத் திட்டத்தின்கீழ் மீதமுள்ள குடியிருப்புகள் கட்டுதல்**

**அ) மாநில அரசு நிதி ஆதாரத்தின் கீழான திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | திட்டங்களின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | திட்ட செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை– அயோத்தியாகுப்பம் | 112 | 7.53 | 4.00 |
| 2. | திருச்சிராப்பள்ளியில் – பீச்சான்குளம் | 685 | 46.35 | 22.00 |
| 3. | திருச்சிராப்பள்ளியில் – துரைசாமிபுரம் | 160 | 10.32 | 4.00 |
| | **மொத்தம்** | **957** | **64.20** | **30.00** |

மேலும், சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் மூலம் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட

குடும்பங்களுக்கான வீட்டுவசதித் திட்டத்திற்கு மாற்றம் செய்தல் மற்றும் இதர நிதி ஆதாரங்களை கொண்டு 1024 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.80.77 கோடி மதிப்பீட்டில் பின்வரும் திட்டப்பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட மறு கட்டுமான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப்பணிகள் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவடையும்.

## ஆ) இதர நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் மறுகட்டுமானத் திட்டங்கள்

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | திட்டங்களின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | திட்ட செலவினம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை–பி.எஸ்.மூர்த்தி நகர் பகுதி– II | 68 | 6.49 | 2.62 |
| 2. | சென்னை–சேனியம்மன் கோயில் | 464 | 44.39 | 33.69 |
| 3. | சென்னை–திருச்சினாங்குப்பம் | 492 | 29.89 | 8.65 |
| | **மொத்தம்** | **1,024** | **80.77** | **44.96** |

**(iii) சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுவசதி**

**(அ) சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுவசதி**

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக, உலக வங்கி நிதியுதவி, அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம் / மாநில நிதியுதவித் திட்டத்தின்கீழ் **6,292** அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.**284.49** கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், இராஜீவ் காந்தி புனரமைப்பு திட்டத்தின்கீழ் **500** வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை நொச்சிக்குப்பம் திட்டப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு சிதலமடைந்த நிலையிலுள்ள **534** அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.**48.06** கோடி செலவில் மீண்டும் கட்டப்படும் என்று அறிவித்தார். அதற்கிணங்க, **536** குடியிருப்புகளுக்கு மாநில நிதியுதவியின்கீழ் ரூ.**48.06** கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி டிசம்பர், **2016** க்கு முன்னர் முடிவுறும்.

**(ஆ) சென்னை நீங்கலாக பிறபகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான மறு குடியமர்வுத் திட்டம்**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வாழும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு மேம்பாட்டு வசதிகளுடன் **325** சதுரஅடி கட்டட பரப்பளவு கொண்ட வீடுகள் சுனாமி மறுகுடியமர்வுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள இக்குடும்பங்களுக்கு ரூ.**42.97** கோடி மதிப்பீட்டில் **611** வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, அவற்றுள் **2015–2016**ஆம் ஆண்டில் **219** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள **392** வீடுகள் **2016–2017**ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

**(iv) மாநில நிதியுதவியின்கீழ் புதிய குடியிருப்புகள் அமைத்தல்**

வடசென்னை மூர்த்திங்கர் தெரு பகுதியில் தரைதளம் மற்றும் ஏழு அடுக்கு மேம்பாட்டில் கட்டுருவாக்க தொழில்நுட்பத்தில் (Pre-fab technology) **960** குடியிருப்புகளை ரூ.**112.80** கோடி செலவில், மாநில நிதி ஆதாரத்தில் கட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2015–2016ஆம் ஆண்டில் 300 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 660 குடியிருப்புகள் 2016–2017ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

**2.7. நந்தனம் – அலுவலக வளாகம்**

சென்னை அண்ணா சாலையை ஒட்டியுள்ள நந்தனம் பகுதியில் 2.75 இலட்சம் சதுரஅடி கொண்ட அலுவலக வளாகம் கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றம் செய்தல் (BOT) திட்டத்தின்கீழ் கட்ட திட்டமிடப்பட்டது. பின்னர் இத்திட்டத்தினை கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றம் செய்தல் முறையில் ஏற்படும் சிக்கல்களை கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று ரூ.240.00 கோடி மதிப்பீட்டில் தற்போது செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் 2016–2017ஆம் ஆண்டில் துவங்கப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்புகளை நன்முறையில் பராமரிக்க ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ள போதுமான வருவாயினை இத்திட்டத்தின் மூலம் ஈட்டப்படும்.

**2.8 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்**

குடியிருப்புகளில் வசிக்கும் தன்மையை மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 5 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடியிருப்புகளுள் உடனடியாக மறுகட்டுமானம் தேவைப்படாத திட்டப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளின் கூரைத்தளங்கள், தரை தளங்கள், பால்கனி, படிக்கட்டுகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல், மேற்கூரையில் ஓடுகள் பதித்தல், குடிநீர் குழாய்கள், கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவறைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல் மற்றும் புதுப்பித்தல் சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2.9. சென்னை அடையாறு மற்றும் கூவம் நதிக்கரையோரங்களில் வாழும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்**

சென்னை மாநகரில் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த கனமழை காரணமாக நீர்நிலைகளின் கரையோரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த

குடும்பங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளை இழந்தனர். இக்குடும்பங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி ஆண்டுதோறும் ஏற்படும் மழை வெள்ளம் மற்றும் தீ விபத்துகள் போன்ற இன்னல்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்கு வசிப்பதற்கு ஏற்ற வீடுகள் வழங்கவும் சென்னையில் உள்ள ஆறுகளின் வெள்ளநீர் செல்லும் திறனை அதிகரிக்கவும் ஒக்கியம் துரைப்பாக்கம், பெரும்பாக்கம், திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலைய நிலம், காஞ்சிபுரம் மாவட்டம் நாவலூார் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கூடப்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுள் 25,000 குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதற்கிணங்க, ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கத்தில் 4,134 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள குடும்பங்களுக்கு விரைவில் குடியிருப்புகள் வழங்கப்படும். இக்குடும்பங்களுக்கு கீழ்க்காணும் அடிப்படை வசதிகள் / சேவைகள் வழங்கப்பட்டுள்ளன:-

1. 400 சதுர அடி பரப்பளவு கொண்ட பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, குளியலறை மற்றும் கழிவறை போன்ற வசதிகள் கொண்ட குடியிருப்புகள்.

2. மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் பொருத்துதல்.
3. குடிபுகுவதற்கு முன்னர் குடியிருப்புகளை சுத்தம் செய்து சுவர்களுக்கு வெள்ளை மற்றும் வர்ணம் பூசுதல்.
4. ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் மறுகுடியமர்வுத் திட்டங்கள், பழைய மகாபலிபுரம் சாலை போன்ற முக்கிய சாலைகளுக்கு அருகில் போதிய அடிப்படை வசதிகளான சாலைகள், தெருமின் விளக்குகள், மழைநீர் வடிகால் கால்வாய்கள், குடிநீர் வசதி, மின் ஆக்கி, குடியிருப்புகளுக்கு மின்தூக்கி, பள்ளிகள், நியாயவிலைக் கடைகள், ஆரம்ப சுகாதார நிலையம், சிறு கடைகள், விளையாட்டு திடல்கள், பால் வழங்கும் நிலையங்கள், பேருந்து முனையம், உடற் பயிற்சியகம், பூங்காக்கள் மற்றும் காவல் நிலையங்கள் போன்ற சமூக வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகரங்களாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.
5. மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு மூன்று தினங்களுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது.
6. குடியிருப்புக்கான தனித்தனி மின் இணைப்புக் கட்டணம் செலுத்துவதை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஏற்றுக்கொண்டது.

7. வீடுகளின் கட்டுமானத்திற்கான பயனாளிகளின் பங்குத் தொகையான திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை அரசு ஏற்றுக்கொண்டது.

8. மறுகுடியமர்வின் போது திட்டப்பகுதியில் முகாம்கள் அமைத்து உடனடியாக உணவுப் பங்கீட்டு அட்டைகளுக்கு அவ்விடத்திலேயே முகவரி மாற்றம் மற்றும் நியாய விலை பொருட்கள் விநியோகிக்கப்பட்டது.

9. மாற்றிடத்தில் மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் குழந்தைகளுக்கு மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் உள்ள பள்ளிகளில் ஆவணம் ஏதுமின்றி அவ்விடத்திலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். இளம் சிறார்களுக்கான பாலர் காப்பகங்கள் அமைக்கப்பட்டன.

10. முன்னர் வாழ்ந்த பகுதிகளில் உள்ள கல்விக் கூடங்களில் படிப்பினை தொடர விரும்பும் மாணவ மாணவியருக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள் நீட்டிப்பு வழங்கப்பட்டது.

11. கீழ்க்குறிப்பிட்டுள்ள படிகள் வழங்கப்பட்டன:-

    (அ) குடியேறியவுடன் இடமாற்றப் படி ரூ.5,000/– (ஒரு முறை)

(ஆ) பயனாளிகளின் வங்கி கணக்கில் பிழைப்புப் படி ஓராண்டிற்கு ரூ.30,000/– (மாதம் ரூ.2,500/– வீதம்)

(இ) மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களை புதிய பகுதியில் தங்களது வாழ்வாதாரத்திற்காக வருவாய் ஈட்டும் வகையில் திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் / வாழ்வாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

12. சென்னை நகரின் ஆற்றங்கரையோரங்களில் ஆண்டுதோறும் ஏற்படும் மழை வெள்ளம், அடிக்கடி ஏற்படும் தீவிபத்துக்கள் போன்ற இன்னல்களுக்குட்பட்டு சுகாதாரமற்ற சூழலில் குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் போதிய அடிப்படைவசதி மற்றும் சமூக வசதிகள் போன்ற அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த நகரங்களில் கட்டப்பட்ட தன்னிறைவான குடியிருப்புகளில் தாமாகவே முன்வந்து குடியேறினர்.

**2.10 சமுதாய வளர்ச்சி மேம்பாடு**

(அ) சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் நகர்ப்புற குடிசைப்பகுதிவாழ் இளைஞர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வேலை வாய்ப்பு திறன் பயிற்சிகள் அளித்தல்.

(ஆ) 2015–2016ஆம் ஆண்டில் ரூ.35.00 இலட்சம் செலவில் 1,790 நபர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

(இ) 2016–2017ஆம் ஆண்டில் ரூ.4.00 கோடி செலவில் 4,200 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும்.

**2.11 சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 2016–2017**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் 2012–2013 முதல் 2013–2014 வரையிலான ஆண்டுகளில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி நகர குடிசைப்பகுதிகளில் வாழும் மொத்த குடும்பங்களில் 45.41 விழுக்காட்டினர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி, 2016–2017 ஆம்

ஆண்டில் பல்வேறு திட்டங்களின் மூலம் கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த **20,153** குடும்பங்கள் பயனடைவர் என கணக்கிடப்பட்டுள்ளது.

## 2.12 மனைகள் / குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கல்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் / மனைகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. **2011–2016** ஆம் ஆண்டுகளில் **14,638** குடியிருப்புகள் / மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. **2016–2017**ஆம் ஆண்டில் வாரியக் குடியிருப்புகள் / மனைகளில் வாழ்ந்து வரும் **6,000**–த்திற்கும் மேலான குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

## 3. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவையாக உள்ளது உறைவிடமாகும். இவ்வடிப்படைத் தேவையினைப் பூர்த்தி செய்வதில் 1912–ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் முக்கிய நோக்கங்களாவன நிதி நிறுவனங்களிடம் நிதியுதவி பெற்று வீடுகள் கட்டுவதற்கு வழியில்லாத நிலையிலுள்ளவர்களுக்கு, ஏற்ற வட்டி விகிதத்தில் மாநிலம் முழுவதும் வீடுகள் கட்டுவதற்கு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் நிதியுதவி அளித்தல். நிலங்களைக் கொள்முதல் செய்து, மேம்படுத்தி, எல்லா வசதிகளும் கூடிய மனைகளாக பிரித்து, வாங்கத்தக்க விலையில் இலாப நட்டமின்றி உறுப்பினர்களுக்கு விற்பனை செய்தல். தமிழ்நாட்டில், 1,040 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் இதுவரை ஏற்படுத்தப்பட்டு, தற்போது 941 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், 744 சங்கங்கள் நகர்ப்புறங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், 197 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் கிராமப்புறங்களில் வாழும்

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வருவாய் வட்ட அளவிலும் செயல் எல்லைகளாகக் கொண்டு செயலாற்றி வருகின்றன.

முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் உறுப்பினர்களுக்கு, வீட்டுவசதிக் கடன், அடைமானக் கடன் மற்றும் நகைக்கடன் வழங்குவதற்காக உறுப்பினர்கள் பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகளையும், மாநிலத் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திடமிருந்து நிதியையும் திரட்டுகின்றன.

## 3.1 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 18.3.1959–இல் **“சென்னை கூட்டுறவு மத்திய வீடு அடைமான வங்கி”** என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் செயல்பாட்டு எல்லையாகக் கொண்டு 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் 941 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் 825 கூட்டுறவு வீட்டுவசதி

சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ.எண். | வீட்டுவசதி சங்கங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நகர்ப்புற வீட்டுவசதி சங்கங்கள் | 628 |
| 2. | கிராமிய வீட்டுவசதி சங்கங்கள் | 197 |
| | கூடுதல் | 825 |

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1959—ஆம் ஆண்டு முதல் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு 31.05.2016 வரை பின்வருமாறு நிதியுதவி செய்துள்ளது:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வீடுகளின் எண்ணிக்கை | கடன் வழங்கிய விவரம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் | 3,61,427 | 3,668.91 |
| 2. | கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் | 8,03,735 | 1,118.43 |
| | **மொத்தம்** | **11,65,162** | **4,787.34** |

## 3.2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு புதிய கடன் வழங்குதல்.

முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை அதிகப்படியாக இருந்த காரணத்தினால், 01.09.2009 முதல் புதிய கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. இருந்தபோதிலும், அத்தடையாணை 05.06.2013 முதல் அரசால் தளர்த்தப்பட்டு, இணையத்திற்கு 100 விழுக்காடு தவணைத் தொகை திருப்பிச் செலுத்தும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் ஆணை வழங்கப்பட்டது. மேலும், இந்நிபந்தனையும் தளர்த்தப்பட்டு 27.02.2014 முதல் அனைத்து கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் தாங்கள் வசூல் செய்யும் தொகையில் 50 விழுக்காடு தொகையினை அந்தந்த சங்கங்களுக்கே நிதியுதவி செய்யும் வகையில் ஆணையிடப்பட்டது. 109 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் 708 உறுப்பினர்களுக்கு ரூ.33.44 கோடி நிதியுதவி 2015–2016 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 2015–2016 ஆம் ஆண்டில் தள்ளுபடி திட்டத்தின் முன்னேற்றம்

தவணை தவறிய தொகையை நட்டம் ஏற்படாதவாறு வசூல் செய்ய வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழக அரசு 'ஒருமுறை காலத் தீர்வு' (One Time Settlement) தள்ளுபடி திட்டத்தை 2015–ஆம் ஆண்டு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ், கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் கடன் பெற்ற பயனாளிகள், அசல் மற்றும் வட்டி திருப்பி செலுத்த முன்வருபவர்களுக்கு தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டம் 16.03.2015 முதல் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் திட்டமாகும். இத்திட்டம், அடிமட்ட பயனாளிகளையும் சென்றடையும் வகையில் வசூல் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 31.5.2016 முடிய 13,120 கடன் தீர்ந்த அசல் ஆவணங்கள் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் மூலம் ரூ.313.00 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.4 திருப்பூர் குமரன் மகளிர் கலைக் கல்லூரி மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியின் பேரில் 1995–ஆம் ஆண்டு திருப்பூர் கூட்டுறவு வீட்டுவசதி

சங்கத்தின் மூலம் ஜெ.ஜெ. மகளிர் கலைக்கல்லூரி தொடங்கப்பட்டது. பின்னர் இது 1996 ஆம் ஆண்டில் திருப்பூர் குமரன் பெண்கள் கலைக் கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1996–1997–ஆம் ஆண்டு முதல் வழக்கமான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இக்கல்லூரியில் 2,500 மாணவிகள் பயின்று வருகிறார்கள். அதேபோல் ஆசிரியர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் துணை ஊழியர்களை உள்ளடக்கிய 150 ஊழியர்கள் இக்கல்லூரியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் கிராமப்புற மாணவிகளின் உயர்கல்வியினை தொடர்வதற்கான ஒரு தளத்தினை இக்கல்லூரி அளிக்கிறது. சிறந்த தொழில்முறை மேலாண்மையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் சிறந்த தேர்ச்சி விகிதத்தை பெற்றுவருகிறது.

இக்கல்லூரியில் சேர விரும்புவதாலும் சேர்க்கை விகிதம் அதிகரிப்பதாலும் ஏற்கனவே உள்ள கட்டிடம் அனைத்து மாணவிகளுக்கும் இடமளிக்க போதுமான வசதியில்லை. எனவே இக்கல்லூரிக்கு அருகில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு காலியாக உள்ள

கட்டிடத்தை **99** வருடத்திற்கு குத்தகைக்கு எடுப்பதற்கு உத்தேசித்துள்ளது.

## 3.5 முன்னேற்றப் பாதை

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக, இணைய கடன் கணக்குகளும், முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்க கடன் கணக்குகளும் திடமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டு, இணையம் நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டியில் நிதியுதவி பெற்று புதிய நெறிமுறைபடுத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தகுதிகளின் அடிப்படையில் முதன்மைச் சங்க உறுப்பினர்களுக்கு வீட்டுவசதி கடன்கள் வழங்கப்படும். மேலும் இணையம் கடன் வசூலில் முறையான கண்காணிப்பு மற்றும் விவேகமான நிதிநெறிமுறைகளை பின்பற்றும்.

## 4. அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம்

**4.1** வீடுகள் கட்டுவதற்காக, அரசுப் பணியாளர்களுக்கு முன்பணம் அனுமதிக்கப்படுவதை முறைப்படுத்தும் மாநில அரசு விதிகளின்கீழ், அரசுப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்கப்படுகிறது.

**4.2** வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு உயர்ந்தபட்ச வரம்பு தொகை அரசுப் பணியாளர்களுக்கு ரூ.25.00 இலட்சமாகவும், அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு ரூ.40.00 இலட்சமாகவும் இருந்து வருகிறது. வீட்டை விரிவாக்கம் செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் தற்போது உள்ள உயர்ந்தபட்ச முன்பணத் தொகையில் 50 விழுக்காடு என்பது தொடர்கிறது.

**4.3** இத்திட்டம், அரசுப்பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்களுக்கான நலத்திட்டமாகவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முன்பணத்திற்கான வட்டி, மாதாந்திரக் கழிவு அடிப்படையில் (monthly diminishing balance) ஒவ்வொரு மாத இறுதியில் நிலுவையாக உள்ள தொகைக்கு படிவீத முறைப்படி (slab rates) கணக்கிடப்படுகிறது. முன்பணக் கடனை முன்முடிவுக்

கட்டணம் ஏதுமின்றி, எப்பொழுது வேண்டுமானாலும் முழுவதுமாகத் திரும்பச் செலுத்தி முன்கூட்டியே கடனை நேர்செய்ய வழிவகை உள்ளது. அரசு ஊழியர் இறக்க நேரிட்டால், தமிழ்நாடு அரசுப்பணியாளர் வீடுகட்டுவதற்கான முன்பண சிறப்பு குடும்ப சேமநல நிதித் திட்டத்தின்கீழ் அவர் உறுப்பினராக இருந்தால் நிலுவையில் உள்ள அசல் மற்றும் வட்டித்தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்கண்ட காரணங்களால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து வீடு கட்டுவதற்காக கடன் பெறுவதைக் காட்டிலும், இத்திட்டத்தின்கீழ் முன்பணம் பெறுவதற்கு அரசுப்பணியாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**4.4.** 2016–2017–ஆம் ஆண்டில், ஏனைய அரசு ஊழியர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்காக ரூ.136.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, தலைமைச்செயலகப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்காக வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்கு தலைமைச்செயலகத்தின் அனைத்து துறைகளின் மானியக் கோரிக்கையில், தனியே நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 5. இடவசதிக் கட்டுப்பாடு

**5.1** தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 திருத்தப்பட்ட சட்டம் 23/1973 கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | இடவசதிக் கட்டுப்பாடு | வீடுகள் வாடகைக்கு விடுவதை முறைப்படுத்துவது |
| 2. | வாடகைக் கட்டுப்பாடு | வாடகையைக் கட்டுப்படுத்துவது |
| 3. | வெளியேற்றுகைக் கட்டுப்பாடு | முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது |

**5.2** தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 என்பது ஒருங்கியல் சட்டம் என்பதால், அதில் திருத்தம் ஏதேனும் மேற்கொள்ள வேண்டுமென்றால், மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். மேலும், தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை) சட்டம், 1960–இன்கீழ் வரும் பிரிவுகள் – 3, 3எ, 12, 13 மற்றும் 22 ஆகியனவும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான

இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரியால் கவனிக்க வேண்டிய பிரிவுகள் ஆகும். இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி (சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர்) இடவசதிக் கட்டுப்பாடுக்கு பொறுப்பானவர் ஆவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழி வகைகளைக் கவனிப்பதற்கு இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி, மேற்படி சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆவார். தற்போது, சென்னையில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது மற்றும் அதனைப் பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும்.

**5.3** தமிழ்நாடு கட்டடங்கள் சட்டம், **1960** பிரிவு **3**–இன்கீழ், கட்டடங்கள் அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு நோக்கத்திற்கும், சொந்த கட்டடம் இல்லாத அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவ்வப்போது அரசு வழங்கும் நெறிமுறை மற்றும் கட்டளைப்படி சட்டப்பூர்வமான அதிகாரத்தின்கீழ் கட்டடங்கள் அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**5.4** கடந்த இருபது ஆண்டுகளாக நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி வாடகை நிர்ணயம் செய்யப்படுவதுடன் பொதுப்பணித்துறையின் மூலம் கணக்கிடப்படும் கணக்கீட்டின்படி, வாடகை மிகவும் அதிகமாக உள்ள பழைய மற்றும் அடிப்படை வசதியற்ற கட்டடங்களை அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது நன்மை பயக்கக்கூடியதல்ல. ஏனென்றால், யாரும் அந்த கட்டடங்களுக்கு குடிவர விரும்பாத நிலையில், அதற்கான வாடகை அரசால் செலுத்தப்பட வேண்டும். மேலும், சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்ற முறையில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடத்தை பராமரிக்கும் பொறுப்பும் அரசையே சார்ந்ததாகும்.

**5.5** தற்போது அரசு ஊழியர்களின் குடியிருப்பு வசதிக்காக வீட்டுவசதி வாரியம் பல்வேறு இடங்களில் வாடகைக் குடியிருப்புகள் கட்டியிருப்பதாலும், வீடு கட்டும் முன்பணம் வழங்குதல் போன்ற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாலும் தற்போது இடமாறுதலில் வரும் எந்த ஒரு அலுவலரும், வீடு ஒதுக்கீடு கோரி மனு ஏதும் செய்வதில்லை.

**5.6** தற்போது சென்னை மாவட்டத்தில், அரசுக் கட்டுப்பாட்டில் எட்டு வீடுகள் மட்டுமே உள்ளன. இந்த **8** வீடுகளும் விடுவிக்கப்பட்டு, உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கும் வரை அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர் ஆவார். அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வீடுகள் மீது பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## 6. நகர் ஊரமைப்பு இயக்ககம்

நகர் ஊரமைப்பு இயக்ககம், நகர் மற்றும் கிராம பகுதிகளுக்கு திட்டமிடல் மற்றும் வளர்ச்சி தொடர்பானவைகளை நிர்வகித்து வருகிறது. நகர மற்றும் கிராமப் பகுதிகளுக்கான நில உபயோகத்தை குறிப்பிட்டு காட்டும் முழுமைத் திட்டங்களை தயாரித்து மற்றும் அவற்றை அமுல்படுத்துவதன் மூலம் வளர்ச்சி உருவாக்கப்படுகிறது. வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள், கட்டட விதிகள் மற்றும் நில உபயோகப் பங்கீடு நெறிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உத்தேச வளர்ச்சித் திட்டங்கள் ஒழுங்குபடுத்துவதன் வாயிலாக திட்டமிட்ட வளர்ச்சி எட்டப்படுகிறது. நகர்ப்பகுதி மற்றும் ஊரக பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT), தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம் (TANSIDCO) போன்ற பல்வேறு அரசு துறைகளால் செயல்படுத்தப்படும் உத்தேசங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கான திட்டமிடல் பணியை ஒருங்கிணைத்து செயல்படுத்த அரசுக்கு இத்துறை உதவுகிறது. நில உபயோக மாற்றம், அரசு நில உரிமை மாற்றம் மற்றும் விதிகளை தளர்த்துதல் போன்ற தொழில்நுட்ப ஆலோசனைகளை அரசுக்கு இத்துறை வழங்குகிறது.

**6.1 சட்டப்பூர்வமான திட்டங்கள் தயாரித்தல்**

**i. மண்டலத் திட்டம்.**

மண்டலத் திட்டம் என்பது, ஒரு தனித்த மாநகரம் அல்லது நகரம் மட்டுமின்றி அதைவிட பெரிய அளவிலான பகுதிக்கு பொருத்தமான நில உபயோக தொடர்பான செயல்பாடுகளை ஒதுக்கீடு செய்தல், உள்கட்டமைப்பு மற்றும் குடியிருப்பு வளர்ச்சி ஆகியவை சம்மந்தமான பரந்த திட்டமாகும். மண்டலத் திட்டமானது பெரிய அளவிலான நில உபயோக செயல்பாடுகள் சம்மந்தமுடையது என்பதால் அது நகர்ப்புற திட்டமிடலின் ஒரு துணைப்பிரிவு ஆகும்.

சென்னைப் பெருநகர பகுதியைத் தவிர, மாநிலம் முழுவதும் **13** மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சேலம், கோயம்புத்தூர், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய மொத்தம் **13,314** ச.கி.மீ பரப்பளவுள்ள மண்டல பகுதிகளுக்கு **2016–2017** ஆம் ஆண்டில் மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

**ii. முழுமைத் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டம்**

நகரப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் தயாரித்தல் இவ்வியக்ககத்தின் முதன்மையான பணியாகும். இத்திட்டமானது குறிப்பிட்ட

காலத்திற்கான நகரப்பகுதியில் ஏற்படும் உத்தேச வளர்ச்சியைக் குறித்து தயாரிக்கப்பட்ட சட்ட ஆவணமாகும். மேற்படி முழுமைத் திட்டத்தின் குறிப்பிட்ட காலவரையறை முடிவுற்றதும், முழுமைத் திட்டத்தினை மறு ஆய்வு மற்றும் மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதுவரை இத்துறையால் **123** நகரங்களுக்கு முழுமைத் திட்டம் / புதுநகர் வளர்ச்சி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் செயல்பாட்டில் உள்ள மொத்த பரப்பளவு **1,28,869** ச.கி.மீ ஆகும். இதில் முழுமைத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு **6,950** ச.கி.மீ ஆகும். மாநிலம் முழுமைக்கும் முழுமைத் திட்டம் தயார் செய்யும் பணி பகுதிகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முதற்கட்டமாக, மொத்தம் **8,447** சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடைய, ஏழு கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக, மொத்தம் **10,781** சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடைய **30** கூட்டு உள்ளூர் திட்டப்பகுதிகள் மற்றும் **17** தனித்த உள்ளூர் திட்டப்பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி **2016–2017**ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில் கூடுதலாக மொத்தம், **320.41** சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடைய **5** அம்ருத் (AMRUT) நகரங்களுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி எடுத்துக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### iii. விரிவு அபிவிருத்தித் திட்டம்

விரிவு அபிவிருத்தித் திட்டம் என்பது நுண்ணிய அளவிலான செயல் திட்டமாகும். விரைவாக வளர்ச்சியடையும் நகரப் பகுதிகளைக் கண்டறிந்து முழுமைத் திட்டத்திற்குட்பட்டு அவற்றிற்கென விரிவு அபிவிருத்தி திட்டங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சமச்சீரான வளர்ச்சிக்கு ஏதுவாக பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல், சிறிய இணைப்பு சாலைகள், முறையான போக்குவரத்திற்காக சுழற்சி சாலைகள், வணிகம் மற்றும் தொழிற்பகுதிகள் போன்ற குறிப்பான பயன்பாட்டிற்காக, இத்திட்டத்தில் நிலப்பங்கீடு செய்யப்படுகிறது. இதுவரை இத்துறையால் 1,703 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. துரிதமாக வளர்ச்சியடையும் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் 2016–2017ஆம் ஆண்டில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.2 உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

உலக அரங்கில் ஒரு நாட்டின் நிலையை அளவிட உள்கட்டமைப்பு வசதிகள் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. இது ஒரு நாட்டின் போட்டித்தன்மையை

நிர்ணயிக்கும் இரண்டாவது தூணாக உலக பொருளாதார மன்றத்தில் மதிப்பிடப்படுகிறது.

பெரிய அளவிலான குடியிருப்பு, வணிகம், நிறுவனம் மற்றும் தொழிற்சாலை கட்டட உத்தேசங்களுக்கு அனுமதியளிக்கும் பொழுது உள்கட்டமைப்பு மற்றும் வசதிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குடிநீர் விநியோகம், இணைப்பு சாலைகள், கழிவு நீர் அகற்றல் மற்றும் பெரிய பாலங்கள் மற்ற பிற வசதிகளை ஏற்படுத்துவதை உறுதி செய்யும் திட்டங்களை செயல்படுத்த இத்தொகை பயன்படுத்தப்படுகிறது. மார்ச், **2016** வரை இந்நிதிக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.**2,689.11** கோடியாகும். இதுவரை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, சென்னை மெட்ரோ ரயில் மற்றும் இம்மாநிலத்தின் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் செயல்படுத்தக்கூடிய ரூ.**2,977.82** கோடி மதிப்பீட்டிலான **48** உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6.3 நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### i. புராதன நகர மேம்பாட்டுத் திட்டம்

புராதன இடங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்துள்ள பகுதிகள் சுற்றுச்சூழல் மாசு அடைவதிலிருந்து பேணிப் பாதுகாப்பது மிக அவசியமாகும். இதுவரை, 70 நகரங்கள்/ கிராமங்கள் அரசால் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதற்கான திட்டங்களை மேற்கொள்ள அதிகபட்சமாக ரூ.1.00 கோடி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 64 புராதன நகரங்கள் / கிராமங்களுக்கு ரூ.37.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ii. போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்

பெரிய மற்றும் சிறிய நகரங்களில் போக்குவரத்துத் தன்மை மற்றும் பயண முறை ஆகியவற்றை அளவீடு செய்து போக்குவரத்து நெரிசலை சீர்படுத்த மற்றும் போக்குவரத்து சுமுகமாக நடைபெறுவதற்கு தேவையானவற்றை நீண்டகால

அளவீடு செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு போக்குவரத்து ஆய்வுகள் இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. போக்குவரத்து மேம்பாடு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு மாநகராட்சிக்கும் அதிகபட்சமாக ரூ.1.00 கோடியும், ஒவ்வொரு நகராட்சிக்கும் அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சமும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும், 25 விழுக்காடு சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பங்காகவும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 76 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு ரூ.31.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### iii. பூங்கா மேம்பாட்டுத் திட்டம்

பொதுமக்கள் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கும் வேலைப்பளுவிற்கு இடையே சிறிது நேரம் ஒய்வெடுக்கவும் பூங்காக்கள் பயன்படுகின்றன. அவை சிறுவர் விளையாடுமிடமாகவும் பயன்படுகின்றன. பூங்காக்கள் சமூக வாழ்க்கைத் தரத்தின் உறுதியான பிரதிபலிப்பாகவும் உள்ளன. தற்போதுள்ள பூங்காக்களை மேம்படுத்த மற்றும் புதிய

பூங்காக்களை உருவாக்க 10 விழுக்காட்டிற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் திட்ட மதிப்பீட்டில் 90 விழுக்காடு, அதாவது அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 187 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு பூங்காக்களை மேம்படுத்த ரூ.13.21 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

# 7. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இன்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஓர் சட்டரீதியான அமைப்பாக 1975–இல் அமைக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, 7 நகராட்சிகள், 12 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 179 கிராமங்களை உள்ளடக்கிய 1,189 ச.கி.மீ பரப்பினை தன்னுடைய நிர்வாக எல்லையாகக் கொண்டுள்ளது.

## 7.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியப் பணிகள்

அ) திட்டமிடுதல் – முழுமைத் திட்டம், விரிவான வளர்ச்சித் திட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்கான இதரத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் செயலாக்குதல்.

ஆ) சென்னைப் பெருநகர்பகுதி வளர்ச்சிக்காக திட்டங்களை ஒருங்கிணைத்தல், மேற்பார்வையிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

இ) சென்னைப் பெருநகர் பகுதியில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல்.

தற்போது, **2026** ஆம் ஆண்டு வரையிலான சென்னைப் பெருநகர்ப்பகுதியில் மக்கள் தொகை முன்கணிப்பு மற்றும் நகர வளர்ச்சியை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட, சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாவது முழுமைத்திட்டத்தை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நிலப்பயன்பாட்டுக் கொள்கைகள் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளின் மூலம் சென்னைப் பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிவிரைவாக ஏற்பட்டு வரும் வளர்ச்சியினை நெறிப்படுத்துகின்றது. இப்பெருந்திட்டம், உள்கட்டமைப்பு மேம்பாடு, போக்குவரத்து சீரமைப்பு, நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வாங்கக்கூடிய விலையிலான வீடுகளை ஊக்குவிக்கும் வீட்டுவசதிக் கொள்கைகள் ஆகியவற்றை கருப்பொருளாகக் கொண்ட ஒருங்கிணைந்த சீரான நகர்ப்புற வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டது. சென்னைப் பெருநகருக்குள் நிலப்பயன்பாடு மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் மாற்றங்கள் குறித்து தேவைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படுகின்றது. நகரின் மையப்பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் நிலையான உள்கட்டமைப்பு

வசதிகள், நிலத்தின் மதிப்பு உயர்வடைதல் மற்றும் புறநகர் பகுதிகளிலிருந்து நகரின் மையப்பகுதிக்கு இலகுவான போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் மக்கள் நகரின் மையப்பகுதிகளிலேயே வசிக்க விரும்புவதால், நகர மையப்பகுதியில் அங்கிகரிக்கப்படாத கட்டுமானங்களின் சவால்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எதிர்கொண்டு வருகிறது. 01.07.2007க்கு முன் கட்டப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை முறைப்படுத்தும் வகையில் நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இல், பிரிவு 113சி–யினைச் சேர்த்து அரசால் ஏற்கனவே திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக நீதியரசர் இராஜேஸ்வரன் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வரன்முறை விதிகள் மற்றும் வழிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்குட்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவில் உள்ள நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்க்க ஏதுவாக ஓர் ஒருங்கிணைந்த ஆய்வினைச் செய்து வருகிறது.

## 7.2 சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள புராதன கட்டடங்கள் மற்றும் இடங்களைப் பாதுகாத்தல்

சென்னை நகரத்தில் வரலாற்று கலாச்சார சிறப்புமிக்க மற்றும் பாரம்பரியமான கலைநயமிக்க கட்டடங்கள் அதிக அளவில் உள்ளன. இந்த பாரம்பரியமிக்க கட்டடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சென்னைப் பெருநகருக்கான வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும் பாரம்பரியமிக்க கட்டடங்களின் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரைகளின்படியும் சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள பாரம்பரியமிக்க கட்டடங்களின் வரைவுப் பட்டியலை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்து வருகின்றது. பொதுமக்கள் மற்றும் பாரம்பரியமிக்க கட்டட உரிமையாளர்களின் கருத்தினைக் கேட்டறிந்து, 164 கட்டடங்களை உள்ளடக்கிய பாரம்பரியமிக்க கட்டடங்களின் அறிவிக்கைக்கான முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது வரைவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க கட்டடங்களின் நான்காம் வரைவுப் பட்டியல் தயார்செய்யப்பட்டு வருகிறது .

## 7.3 பின்னல் வலைச் சாலைகள் உருவாக்குதல்

சென்னைப் பெருநகரில் புறநகர்ப்பகுதிகள் விரைவாக நகரமயமாகி வருகின்றன. இந்நகர்மயமாக்கலின் வேகத்திற்கு ஏற்ப சாலைகளின் மேம்பாடு அமையவில்லை என்பதையும், புறநகர் பகுதியில் சாலை படிநிலை அமைப்பு சரியான முறையில் நிறுவப்படவில்லை என்பதையும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் கவனத்தில் கொண்டது. எனவே, சென்னை நகர மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், பயண நேரத்தைக் குறைக்கவும் மற்றும் போக்குவரத்து வசதியை மேம்படுத்தவும், சென்னைப் பெருநகர் பகுதியில் வேகமாக வளர்ந்து வரும் சென்னைப் பெருநகர் பகுதியின் தென்பகுதி மற்றும் வெளிவட்டச் சாலையை ஒட்டிய 53 கிராமங்களுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பின்னல் வலைச் சாலைகள் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. இந்த பின்னல் வலைச்சாலைத் திட்டத்தைத் தயாரிக்க கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் துறை, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திட்டமிடுதல் மற்றும் கட்டடக்கலை பள்ளி, விஜயவாடா ஆகியோர் கலந்தாலோசகரர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்கலந்தாலோசகர்கள், குன்றத்தூர் மற்றும் ஜல்லடம்பேட்டை கிராமங்களுக்குப் பின்னல் வலைச் சாலைத் திட்டத்தை

தயாரித்துள்ளனர். இத்திட்டத்திற்கான ஆய்வு 19 கிராமங்களில் முடிவடைந்துவிட்டது. இப்பணி 6 மாத காலத்திற்குள் முடிவடையும்.

## 7.4 மாதவரத்தில் துணைப் புறநகர் பேருந்து முனையம் அமைத்தல்

கோயம்பேட்டில் உள்ள சென்னைப் புறநகர் பேருந்து முனையத்தின் போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கும் நோக்கில், மாதவரம் பேருந்து மற்றும் சரக்குந்து வளாகத்தில் உள்ள 8 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு துணைப் புறநகர் பேருந்து முனையம் அமைப்பதற்கான அறிவிப்பு 2011–2012–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில் வெளியிடப்பட்டு, அதற்கான நிர்வாக ஒப்புதல் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. தற்போது, ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கட்டுமானத்திற்கான ஒப்பந்தப் புள்ளி அளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம் 24 மாதங்களில் நிறைவேற்றப்படும்.

## 7.5 வண்டலூர் புறநகர் பேருந்து நிலையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.04.2013 அன்று தமிழக சட்டப் பேரவையில், கோயம்பேடு புறநகர்

பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் தெற்கு நோக்கி செல்லும் பேருந்துகளுக்காக வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டத்தை அறிவித்தார். அரசு, இத்திட்டத்தினை ரூ.376.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு ஒப்புதலுடன் வட்டாட்சியர் மற்றும் சார்பு அலுவலர்களுடன் கூடிய ஒரு நிலம் கையகப்படுத்தும் அலகும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத் தன்மையான நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துவதற்கான உரிமைச் சட்டம், 2013 நிறைவேற்றப்பட்டுள்ளதால், இத்திட்டத்திற்கான மாற்று இடமாக வருவாய்த்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான ஜிஎஸ்டி மற்றும் வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கென அந்த நிலங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7.6 பெருந்திரள் துரித இரயில் திட்டம்–II விரிவாக்கம்

தற்போது, இரண்டு கட்டமாக செயலாக்கப்பட்ட பெருந்திரள் துரித இரயில் திட்டம் (MRTS) சென்னை கடற்கரை முதல் வேளச்சேரி வரை பயன்பாட்டில் உள்ளது. வேளச்சேரி முதல் புனித தோமையார் மலை வரையிலான **5** கிலோமீட்டர் தூரத்திற்கான துரித இரயில் போக்குவரத்துத் திட்ட நிலை–II விரிவாக்கப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.**495.74** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான செலவு தமிழ்நாடு மற்றும் மத்திய அரசிற்கிடையில் **67:33** விகிதாச்சாரப்படி பகிரப்பட்டு, பெருநகர போக்குவரத்துத் திட்டத்தால் (இரயில்வே) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக மே, **2016** வரை ரூ.**352.25** கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்த உடன் பெருந்திரள் இரயில் போக்குவரத்து வேளச்சேரியிலிருந்து புனித தோமையார் இரயில் நிலையம் வரை நீட்டிக்கப்படும். மீதமுள்ள சுமார் **500** மீட்டர் தூர தடத்திற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்த இடைக்கால இழப்பீடு தொகையினை நில உரிமையாளர்களுக்கு வழங்க

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினைகள் விரைவில் சரி செய்யப்பட்டு, இத்திட்டத்தினை செயல்படுத்த இரயில்வே துறையிடம் நிலம் ஒப்படைக்கப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டபின் புனித தோமையார் மலையில், பெருந்திரள் துரித இரயில் திட்டம் சென்னை மெட்ரோ இரயில் மற்றும் புறநகர் இரயில் ஆகியவை சந்திப்பதால் புனித தோமையார் மலை பலமுனை போக்குவரத்து மையமாக உருவெடுக்கும்.

## 7.7 மழைநீர் சேகரிப்பு பற்றிய தணிக்கை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பெருநகரப் பகுதியில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் மழைநீர் சேகரிப்பு முறையினை மேலும் சிறப்புடன் செயலாக்க ஓர் ஆய்வு செய்து, கலந்தாலோசகர் இறுதி அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கை ஆய்வு செய்யப்பட்டு, ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவுகள், மழைநீர் சேகரிக்க பின்பற்றப்படும் நடைமுறைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்தக்கூடிய கொள்கை முடிவுகள் எடுக்கவும், மழைநீர் சேகரிப்பு குறித்து பிரச்சாரம் செய்யவும் பயன்படும்.

## 7.8 திறந்த வெளியிடங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள்

குடியிருப்பு பகுதிகளின் அருகில் விளையாட்டு வசதிகள் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்தாலோசித்து சென்னைப் பெருநகரில், ஒரு ஏக்கருக்கு மிகுதியாக உள்ள திறந்த வெளியிடங்களை விளையாட்டு மைதானமாக உருவாக்கும் திட்டத்தை வடிவமைத்துள்ளது. குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி திறந்தவெளிப் பகுதிகளை விளையாட்டு வளாகங்களாக மேம்படுத்த, மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆலோசனையுடன், உள்ளாட்சி அமைப்புகளால் கண்டறியப்படும் திட்டங்களுக்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதி உதவி அளிக்கும். மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆலோசனையுடன் சென்னைப் பெருநகரில் **6** திறந்த வெளியிடங்களில் ரூ.**1.51** கோடி மதிப்பீட்டில் விளையாட்டு வசதிகளை உருவாக்க, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிர்வாக ஒப்புதல்

வழங்கியுள்ளது. இத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும்.

### 7.9 பல்வழிப் போக்குவரத்தினை ஒருங்கிணைப்பதற்கான ஆய்வு

சென்னைப் பெருநகர்ப் பகுதியிலுள்ள, புறநகர் மற்றும் துரித ரயில் நிலையங்களின் அருகில் உள்ள பொதுப் போக்குவரத்து அமைப்புகளான பேருந்து, புறநகர் ரயில் மற்றும் இடைநிலை போக்குவரத்து வாகனங்கள் போன்ற பல்வழி போக்குவரத்து அமைப்புகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஓர் ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து அமைப்புகளுக்கிடையே தடையில்லா தொடர்பு உறுதிபடுத்தப்படுவதுடன் பொதுப் போக்குவரத்தும் மேம்படுத்தப்படும். சென்னைப் பெருநகர்ப் பகுதியிலுள்ள இரயில் தடங்கள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நான்கு கலந்தாய்வாளர்களுக்குப் பணி அளிக்கப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை கலந்தாய்வாளர்களிடம் பெறப்படவுள்ளது. அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் இவ்வாய்வின் பரிந்துரைகள் உரிய ஒப்புதலுடன் செயலாக்கப்படும்.

**7.10 பசுமைக் கட்டடங்களை ஊக்குவிக்க சலுகைகள் அளிப்பது குறித்த ஆய்வு**

பெங்களூரிலுள்ள எனர்ஜி ஆராய்ச்சி நிறுவனம் (The Energy Research Institute), மேற்படி ஆராய்விற்கான கலந்தாய்வாளராகத் தேர்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வு நிறுவனம் இறுதி அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்த இறுதி அறிக்கையின் முடிவுகள் / பரிந்துரைகள் ஆய்வில் உள்ளது. இந்த ஆராய்வு முடிவுகளின் அடிப்படையில் பசுமைக் கட்டடங்களை ஊக்குவிக்கத் தகுந்த கொள்கை வகுக்கப்படும்.

**7.11 கோயம்பேடு மொத்த விற்பனை உணவு தானிய அங்காடியில் சேமிப்புக் கிடங்கு அமைத்தல்**

தமிழக சட்டமன்றப் பேரவையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் **10.07.2014** அன்று கோயம்பேடு வளாகத்தில் சுமார் ரூ.**3.00** கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கும் பணி நிறைவுபெற்று கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பிப்ரவரி, **2016**–இல்

ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 15 மாதங்களில் நிறைவேற்றப்படும்.

## 7.12 சாத்தாங்காட்டில் கட்டப்படவுள்ள கனரக வாகன நிறுத்தம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், தமிழக சட்டமன்றப் பேரவை விதி 110–இன்கீழ் 15.09.2015 அன்று எண்ணூர் துறைமுகத்தின் நுழைவாயிலில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் இணைந்து கூட்டுமுயற்சியாக ஒரு கனரக வாகன நிறுத்துமிடம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இதனிடையே, கனரக வாகன நிறுத்தத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடமானது நீர்வழித்தடங்களில் வசிக்கும் குடிசைப்பகுதி குடும்பங்களின் மறுவாழ்விற்கான வீட்டுவசதித் திட்டம் அமைக்க பரிசீலிக்கப்பட்டுள்ளதால், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மாற்று இடம் தேர்வு செய்ய வேண்டியதாயிற்று.

அதற்கிணங்க, சாத்தாங்காடு இரும்பு மற்றும் உருக்கு அங்காடியில் உள்ள சுமார் 35 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம்

கனரக வாகன நிறுத்தம் அமைப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்டு சாத்தியக்கூறு ஆராயப்பட்டு, அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## 7.13 கோயம்பேடு மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி வளாகத்தினுள் ஒரு வணிக வளாக கட்டடம் கட்டுதல்

மேற்காணும் திட்டத்திற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.21.75 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 7.14 தேசிய நெடுஞ்சாலை–45இல் திரிசூலம் முதல் செங்கல்பட்டு வரை உயர்மட்ட சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆராய்வு மேற்கொள்ளுதல்

GST சாலையின் போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்கான வழியாக, ஓர் உயர்மட்ட சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூற்றினை ஆய்வு செய்ய கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான இடைக்கால அறிக்கையை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

## 7.15 கடம்பூர் கிராமத்தில் உள்ள 222 ஏக்கர் நிலப்பரப்பை தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதியாக மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–இன்கீழ், 15.07.2014 அன்று, கடம்பூரில் தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதி அமைப்பதற்கான திட்டத்தினை அறிவித்தார்.

நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 9(C) உட்பிரிவு (vi)-இன்படி, கடம்பூர் கிராமத்தில் 222 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த வீட்டுமனை பிரிவினை உள்ளடக்கிய ஒரு தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதியை அமைக்கவும், அதற்கு ஒப்புதல் அளிக்கவும் தேவையான அதிகாரம் அளித்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதி வனப்பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வருவதால், மத்திய அரசின் வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்று ஒரு மாற்று இடம் அளித்து இத்திட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.16 கோயம்பேடு அலுவலக வளாகம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–இன்கீழ் 15.07.2014 அன்று, கோயம்பேட்டில் அலுவலகக் கட்டடம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட (DPR) அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவு பெற்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் பிப்ரவரி, 2016–இல் பணி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 24 மாதங்களில் நிறைவேற்றப்படும்.

## 7.17 உள்கட்டமைப்பு மேம்பாடு

சென்னைப் பெருநகர மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ள 5 சுரங்க நடைபாதைகளின் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஏற்கனவே நடைபெற்று வருகின்றது. நெடுஞ்சாலைத் துறையால் செயல்படுத்தப்படவுள்ள மீதமுள்ள இரண்டு சுரங்க நடைபாதைகளின் கட்டுமானப் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியிலிருந்து இத்திட்டம் செயலாக்கப்படும்.

**7.18 வேளச்சேரியில் அமைந்துள்ள பெருந்திரள் துரித இரயில் நிலையத்தின் மேலுள்ள பகுதியை மேம்படுத்துதல்**

வேளச்சேரியில் அமைந்துள்ள பெருந்திரள் துரித இரயில் நிலையத்தின் மேலுள்ள பகுதியை 1.11 இலட்சம் சதுர அடியில் வணிக பரப்பிடமாக ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கலந்தாலோசகரை நியமிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. திட்டத்தின் வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டவுடன், இத்திட்டம் 18 மாதத்தில் செயல்படுத்தப்படும்.

**7.19 சென்னை மத்திய சதுக்கம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15.9.2015 அன்று ரூ.389.42 கோடி மதிப்பீட்டில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில் பலதரப்பட்ட போக்குவரத்து மையத்தினை அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டார். இந்த பலதரப்பட்ட போக்குவரத்து மையம் மத்திய சதுக்கமாக உருப்பெற்று சென்னை மாநகரின் அடையாளச் சின்னமாக விளங்கும். இத்திட்டம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவி மூலம் சென்னை மெட்ரோ இரயில்

கழகத்தால் நிறைவேற்றப்பட்டு பரவலான வாகனம் நிறுத்துமிடம் மற்றும் பசுமைவெளி வணிக நடைபாதைகளோடு வெளியூரிலிருந்து வரும் பயணிகள் மற்றும் புறநகர் ரயில், மெட்ரோ இரயில் மற்றும் பேருந்து பயணிகளுக்கு தங்குதடையற்ற வகையில் போக்குவரத்து முறையினை மாற்றிக்கொள்ள வழிவகுக்கும். அரசு இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் கழகம் விரிவான வளர்ச்சித் திட்டத்தினை இறுதி செய்யும் பணியில் உள்ளது.

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**

**அமைச்சர்**

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி**